தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1981 மார்ச் 23.

பங்குனி 10, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராஜாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.''

சொற்களின் தொகுதியறிந்த தூய்மை உடையவர் அவைக் களத்தின் வகையினை அறிந்து, வல்லவர்களின் அவையில் வாய் சோர்ந்து பிழை சொல்லமாட்டார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பெரம்பூர் தொகுதியில் குடிசைகளுக்கு தீவைப்பு

*வினா எண். 431-அ—திரு. சு. பாலன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் பெரியார் நகர், இந்திரா நகர் ஆகிய இடங்களில் குடிசைகளுக்கு 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27ஆம் நாள் அன்று பகல் சுமார் 1—30 மணிக்கு சமூக விரோதிகள் தீயிட்டதும், கொள்ளையடித்ததும் உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27ஆம் நாள் அன்று பகல் சுமார் 2—30 மணிக்கு வியாசர்பாடியில் உள்ள பெரியார் நகர், இந்திரா நகர் ஆகிய இடங்களில் உள்ள குடிசைகளுக்கு ஒரு கூட்டத்தினரால் தீவைக்கப்பட்டது. ஆனால், கொள்ளையடிக்கப்படவில்லை.

(ஆ) இதன் தொடர்பாக குற்ற எண். 1540/80-இல் இ.பி கோ. பிரிவுகள் 147, 148, 323, 427, 436 மற்றும் 395-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு 11 பேர்கள் குற்றம் சாட்டப பட்டனர். குற்றம் சாட்டப்பட்ட 11 பேரில் 8 பேர் கைது செய்யப்பட்டனர். மூவர் சரணடைந்தனர்.

புலன் வசாரணையில் மேலும் 6 நபர்கள் கைது செய்யப்பட்டு மொத்தம் 17 பேர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டு வழக்கு நீதிமன்றத்தில் வசாரணையில் உள்ளது.

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27ஆம் நாள் அன்று சென்னையிலே நடைபெற்ற இப்படிப்பட்ட துக்ககரமான செய்தி பற்றி கேள்வி கேட்டு ஏறக்குறைய 9 மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், இப்போது தான் இந்தக் கேள்வி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆகவே எவ்வளவு காலதாமதத்தை இந்த சர்க்கார் ஏற்படுத்துகிறது என் பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அன்றையதினம் சில சமூக விரோதிகள் திடீரென தீயிட்டுக் கொளுத்தியதன் காரண மாக பல வீடுகளிலே பலபேர் புகுந்து பல்லாயிரக்கணக்கான ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கின்றது என்பதாக மனு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படி இருந்தும் மாண்புமிகு முன்னவர் அவர்கள் அங்கே கொள்ளை அடிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த வழக்கு முடிந்துவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே: கொள்ளை அடிக்கப்பட்டதா என்று கேள்வி கேட்கப் பட்டது. கொள்ளை அடிக்கப்படவில்லை ஆனால், இந்திரா நகரில் 30 குடிசைகளும், பெரியார் நகரில் 30 குடிசைகளும் ஆக மொத்தம் 60 குடிசைகள் தீயினால் சேதம் அடைந்திருக்கின்றன. அவற்றின் சேதம் 30 ஆயிரம் ரூபாய் என்று சொல்லப்பட்டிருக் கின்றது. இது சம்பந்தமாக 11 பேர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகின்றது.

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, திடீரென்று சமூக விரோதிகள் பாய்ந்து தீயிட்டுக் கொளுத்தி இருக்கின்றனர். அங்கே பாதிக்கப்பட்ட குடிசைவாசிகளுக்கு முதல்வர் நிவாரண நிதியி லிருந்து ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

1981 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி நிதியாக ரூபாய் 100-ம் 5 கிலோ அரிசியும் வேட்டி, புடவை ஆகியவைகளும வழங்கப் பட்டுள்ளன.

அரசு அலுவலகங்களுக்கு வார விடுமுறை

*வினா எண். 431-ஆ— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலகங்கள் வாரத்திற்கு இரண்டு நாட்கள் விடுமுறை அளிப்பதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசு இது குறித்து ஒரு முடிவு எடுத்தபின் அதைக் கருத்திற்கொண்டு, மாநில அரசு முடிவு எடுக்கலாம் என்று கருதப்பட்டது. மத்திய அரசு தனது அலுவலகங்களில் வாரத்திற்கு 5 நாள் பணி முறையைக் கொண்டு வருவது வேண்டாமென முடிவு செய்து உள்ளதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. அது பற்றி அதிகாரப் பூர்வமான தகவல் வந்ததும் மாநில அரசு இறுதி முடிவு எடுக்கும்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, தற்போது குடிநீர்-வடிகால் வாரியத்தில் வாரத்திற்கு இரண்டு முறை விடுமுறை விடப்படுகிறது என்பது நம்முடைய முன்னவர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலமான கர்நாடகத்தில், வாரத்தில் ஓர் நாளில் அலுவலகங்களின் வெளிக் கதவுகளை அடைத்துவிட்டு, அன்றைக்கு விசிட்டர்கள் யாரையும் அனுமதிக்காமல், அரசு அலுவல்களை மட்டும், அன்று பூராவும் அமைச்சர்களும், அரசு அலுவலாளர்களும் பார்க்கின்ற முறை—வேலை செய்கின்ற முறை அமல்படுத்தப்படுகிறது. அதைப்போலவே தமிழகத்திலும் செய்ய, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய ஆலோசனை தமிழகத்தில் தற்போது இல்லை. அரசு அலுவலர்களின் வேலை நேரம் வாரத்தில் 5 நாட்களா, அல்லது 6 நாட்களா என்பது பற்றித்தான் இங்கே கேள்வியாக எடுத்துக்கொண்டிருக்கிற பிரச்னை. அது பற்றி மத்திய அரசு ஆராய்ந்து, தற்போது நடைமுறையில் இருந்து வருவதைப்போலவே நிலைமையை நீடிக்கலாம்